***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT***
***Mannargudi***
***CC.No. 554 /2020– P.W. 1 (LW1)***

| | |
|---|---|
| *Name* | முத்து(எ) முத்துகிருஷ்ணன் |
| *Father/Husband's Name* | த/பெ. கணேசன் |
| *Village* | |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | 51 |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 30.01.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் வேளாங்கன்னி பேன்சிஸ்ஸ்டோரில் வேலை பார்த்து வருகிறேன். எதிரியை எனக்கு தெரியும். கடந்த 5,6 ஆண்டுகளுக்கு முன்பு காலை 6 மணியிலிருந்து 7 மணிக்குள் மன்னார்குடி மூன்றாம் தெரு , புளியமரத்தருகே டேனிங்கில் சேகர் என்பவரும், மணி என்பவரும் சேகர் போனை மணி எடுத்துக்கொண்டதாக பேசிக்கொண்டிருந்தார்கள். அந்த இடத்தில் இருந்த என்னை கூப்பிட்டு சேகர் என்பவர் மேற்படி சங்கதியை சொன்னார்.

2. நான் எதிரி மணியிடம் போனை எடுத்தியா என்று கேட்டேன் அதற்கு மணி என்னை நீ பாத்தியா என்று கேட்டு திரும்பும் பொழுது அவர் வைத்திருந்த பாட்டிலால் இடது காது ஓரத்தில் குத்தினார் . அதில் எனக்கு ரத்தக்காயம் ஏற்பட்டு மயக்கம் வந்து கீழே விழுந்து விட்டேன். என்னை மன்னார்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேகர் என்பவர் சேர்த்தார் பின்னர் மேல் சிகிச்சைக்காக திருவாரூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பினார்கள். 10 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். நான் மன்னார்குடி அரசு மருத்துவமனையில் இருந்த சம்பவத்தன்றே போலீசார் என்னை விசாரித்தார்கள்.

என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்ததுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் முதல் விசாரணையில் சொன்ன விவரங்களைதான் போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து சுமார் 10 நிமிடம் கழித்து மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு மன்னார்குடி நகர காவல்நிலையத்தினர் வந்து விட்டார்கள் என்றால் சரிதான். நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான்.

2) நான் மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் ஏறத்தாழ என் மீது 15 க்கு மேற்படி வழக்குகள் நிலுவையில் இருந்ததுஎ ன்றால் சரிதான். சரித்திர குற்றவாளி பட்டியலில் எனது பெயர் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் ஏறத்தாழ 7,8 கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சுமார் 6,7 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் பொது மக்கள் யாருமே இல்லை.

3) முதல் விசாரணையில் சொன்னதுபோல் எதிரி எந்த தருணத்திலும் எதிரி என்னை பாட்டிலால் குத்தவில்லை என்றால் சரியல்ல. மூன்றாம் தெரு என்பது கிழக்கு மேற்கான சாலை என்றால் சரிதான். புதுத்தெரு என்பது மூன்றாம் தெருவில் இருந்து சுமார் 200 மீட்டருக்கு அப்பால் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரி என்னை தாக்கல் வில்லை என்றும் எதிரிக்கு எதிராக உண்மைநிலையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.